1987 ஏப்ரல் 29]

பட்டுள்ள ஐவரும் இயற்கையாகத்தான் மரணம் அடைந்துள்ளனர் என்று பதிவாகியுள்ளது. இவர்களின் மரணம் குறித்து எவ்விதப் புகார்களையும் காவல் நிலையத்தில் யாரும் தாக்கல் செய்யவில்லை.

3. மேற்குறிப்பிட்டுள்ள தகவல்களினால் கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளதுபோல கோயம்புத்தூர் பூ மார்க்கெட் அருகே தேவாங்கர் பேட்டையில் கள்ளச்சாராயம் குடித்து 6 பேர் மரணம் அடைந்ததாகக் கூறப்பட்டுள்ளது உண்மைக்குப் புறம்பானதாகும்.

(ஏ) திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களில் ஆலயப் பணியாளர் போராட்டம்.

* திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி, கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்ட திருக்கோயில் பணியாளர்கள் சங்க உறுப்பினர்கள் கடந்த 9—3—1987 முதல் நடத்தி வரும் 'அறப் போராட்டம்' குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மீன்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை நான் வைக்கிறேன் :

அறிக்கை.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டம் மற்றும் இதர ஆலயப் பணியாளர்கள் ஊதிய உயர்வு, அகவிலைப்படி மற்றும் கருணைத் தொகை வேண்டி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

2. இச்சங்கம் அரசினால் அங்கீகாரம் பெறப்பட்டதன்று. மேலும், ஆலயப் பணியாளர்களின் பணி நியமனத்திற்கான கல்வித் தகுதிகள் ஆகியவை அரசுப் பணியாளர்களைப் போன்று வரையறுக்கப்பட்டவை அல்ல. மேலும் அவர்களது பணியின் தன்மையும், அரசு பணியாளரைப் போன்றவையல்ல. மேலும் அவர்களது கல்வித் தகுதி, பணியின் தரம் வெகுவாக அரசுப் பணியாளர்களிடமிருந்து மாறுபட்டுள்ளது. ஆனால் ஆலய ஊழியர்கள் வேறு பல சலுகைகள் பெறுகின்றனர். உதாரணமாக

திருவிழாக் காலங்களில் மரியாதை பெறுதல், ஓய்வு பெறும் வயது 60 போன்றவையாகும். இது தவிர, ஆலயப் பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் ஒரு மாத ஊதியம் போனசாக வழங்கப்பட்டு வருகிறது.

3. எனினும், இந்த அரசு முதன் முறையாக, இந்த நிலைமையை மாற்றி ஆலய ஊழியர்களுக்கும் சம்பள விகிதங்கள் நல்ல முறையில் அமைக்கப்பட வேண்டும் எனக் கருதி, வெவ்வேறாக இருக்கும் அவர்களது சம்பள விகிதங்களை சீராக்கி 125 ஊதிய விகிதங்களாக இருந்தவைகளை 20 ஆகக் குறைத்து, 1—4—1986 முதல் அமுல்படுத்தி அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளன. இவ்வூதியம் நிர்ணயிக்கும்போது குறைந்தபட்ச பணப்பயன் ரூ. 20 ஆக (Minimum fixation benefit) நிர்ணயித்து அரசு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாணைகளினால் 2,640 ஆலயப் பணியாளர்கள் பயனடைகின்றனர். இதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 22.32 லட்சம் ஆகும்.

4. தற்போது சீரமைக்கப்பட்டுள்ள திருந்திய சம்பள விகிதங்கள் முதல் நிலை முதல் நான்காம் நிலை வரையிலுள்ள திருக்கோயில் பணியாளர்களுக்குப் பொருந்தாது. ஆகையால், இப்பணியாளர்களும் பயனடையும் வகையிலும், அவர்களது அவாவினை நிவர்த்தி செய்யும் வகையிலும், கருணைப் பணிக்கொடையாக தலா ரூ. 200 (ரூபாய் இருநூறு மட்டும்) ஒரே தவணையாக அவர்களுக்கு வழங்கலாம் என்று இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையருக்கு அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

5. மேற்படி திருந்திய ஊதிய உயர்வு வடபழனி அருள்மிகு வடபழனியாண்டவர் ஆலயம், திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி ஸ்வாமி ஆலயம், சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் ஆலயம் மற்றும் திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

6. இவை அல்லாமல், திருக்கோயில் பணியாளர்களுக்கு, 1—3—1986 முதல் மற்றும் 1—5—1986 தேதிகளில் அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட அகவிலைப்படி தவணைகளை முறையே 1—9—1986 மற்றும் 1—11—1986 தேதிகளிலும், 1—7—1986 முதல் 4 விழுக்காடாக அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அகவிலைப்படி தவணையினை, 1—1—1987-ல் இருந்தும் முதுநிலை ஆலயப் பணியாளர்களுக்கு வழங்கப் பெறலாம் என்று அரசு அறிவித்துள்ளது.

1987 ஏப்ரல் 29]   [திரு. வி. வி. சுவாமிநாதன்]

7. இதனைத் தொடர்ந்து தற்போது திருக்கோயில் பணியாளர்கள் அடியோடு போராட்டத்தை நிறுத்தி சுமூகமான முறையில் பணியாற்றுகின்றனரென்ற விபரமும் தெரிவிக்கப்படுகிறது.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையை வைத்து இன்றைக்கு அந்தச் சங்க ஊழியர்கள் மத்தியிலே ஒரு நம்பிக்கையை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இருந்தாலும் கூட இந்தப் பிரச்சினை தொடர்ந்து வரக்கூடிய ஒரு அபாயம் இருக்கிறது. அடிப்படையான அவர்கள் கோரிக்கை என்னவென்றால் அவர்களை அரசு ஊழியர்களாக மாற்ற வேண்டும் என்பது தான். அவர்களுடைய ஊதியம் மாதாமாதம் அவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது என்பதையும் அவர்கள் சொல்லி வருகிறார்கள். அதுபற்றி நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு நிரந்தரமான ஒரு நன்மையை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோரிக்கைகளும் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. தேவைகளும் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. கூடுமானவரையில் அவர்கள் திருப்தி அடைகிற அளவுக்குத்தான் இன்றைய தினம் சம்பள உயர்வுகள், சலுகைகள் இன்னும் பல்வேறு தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. குறைகளைப் பற்றி மனு கொடுக்கிறபோது அவ்வப்போது அதை ஆராய்ந்து பார்க்கிறோம்.

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர்களுக்கு சிறப்பு சலுகைகள் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். ஓய்வு பெறுகிற வயதைக் கூட கூட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோன்று சிறப்பு அடிப்படையிலே ஒட்டு மொத்தமான பொதுவான நிதி ஒன்றை ஏற்படுத்தி அதிலிருந்து சம்பளம் கொடுக்கக்கூடிய ஒரு சிறப்பு திட்டத்தை அரசு நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: துணைத் தலைவர் அவர்களே, அந்தந்தப் பகுதிகளில் சம்பளம் கொடுப்பதற்கென்று நிதி இருக்கிறபோது பொதுவாக ஒரு நிதி ஏற்படுத்த அவசியம் இல்லை.